*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*15(2), 2022*

# குழந்தை தத்தெடுப்பு தொடர்பான இஸ்லாமிய மாற்றீடுகள்: ஓர் இலக்கிய மீளாய்வு

**ஏ.எல். பாத்திமா ஷமீதா[1] & எம்.ஐ.எம். ஜெஸீல்[2]**
[1,2]இஸ்லாமிய கற்கைகள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: fathimazameetha@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான சட்டக் கோவையுடன் நீண்ட காலமாக நடைமுறையிலுள்ள ஒரு வழக்கமாகும். சில முஸ்லிம் நாடுகள் உட்பட பல நாடுகளில் சட்ட ஏற்பாடுகளுடன் இந்த செயற்பாடு இன்று அங்கிகரிக்கப்பட்டுள்ளது. இஸ்லாத்தின் ஆரம்பகாலம் வரை வழக்கில் இருந்த குழந்தை தத்தெடுத்தல் முறையை அது தடை செய்து மாற்று ஒழுங்குகளை முன்வைத்துள்ளது. குழந்தைத த்தெடுப்பு தொடர்பான இஸ்லாமிய மாற்றீடுகளை கோட்பாட்டு ரீதியாக விளக்க முனையும் இவ்வாய்வு, தொடர்பான இலக்கியங்களை மீளாய்வுக்கு உட்படுத்தி, அவற்றின் கருத்தாக்கங்களை பகுப்பாய்கிறது. இஸ்லாம் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு பகரமாக முன்வைக்கும் மாற்றீடுகளை இலக்கியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளன. அர்-ரழா (பாலூட்டுதல் மூலம் குழந்தையாக மாறுதல்), அல்-கபாலா (பொறுப்பேற்றல்), அல்-முஸாஹரா (திருமணத்தின் மூலம் உறவாகமாற்றிக் கொள்ளல்), அல்-முஆகாத் (மார்க்கத்தில் சகோதரனாக மாற்றிக் கொள்ளல்), அல்-வஸீய்யா (உயில் எழுதுதல், மரணசாசனம்), அல்-ஹிபா (அன்பளிப்பாக வழங்குதல்). குழந்தை தத்தெடுத்து வளர்க்க ஆர்வம் கொண்ட முஸ்லிம்களுக்கு அதுதொடர்பான அறிவுறுத்தலாகவும் வழிகாட்டியாகவும் அமையவல்லது இவ்வாக்கம்.

**பிரதான சொற்கள்:** குழந்தை தத்தெடுத்தல், அர்-ரழா, அல்-கபாலா, அல்-முஸாஹரா, அல்-முஆகாத், அல்-வஸீய்யா, அல்-ஹிபா

## 1. ஆய்வுப் பின்னணி

குழந்தை தத்தெடுத்தல் எனும் செயற்பாட்டுக்கான கருத்தாக்கம் பல மொழிகளில் இருந்தும் புரிந்து கொள்ள முடியும். அந்தவகையில் தத்தெடுத்தலானது பிரஞ்சு மொழியான 'Adoptare' என்ற மூலச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது. அது 'தெரிவுசெய்தல்' என்ற கருத்தினையும் (Ben-Nun, 2016) இலத்தீன் மொழியில் 'Adoptio' என்றசொல்லானது 'பாதுகாப்புப் பெறுதல்' என்ற கருத்தினையும் (Chinyere, 2013), ஆங்கிலச் மொழியில் 'Adoption' என்ற சொல்லானது "ஒருவரின் குழந்தையை சட்டபூர்வமாக எடுத்து, அதனை தனது குழந்தை போல வளர்த்தல்" எனவும் (Rosenthal, 1993) பொருள்படுகிறது. இந்த சொல்லாடல்கள் பல்வேறு சமூகச் சூழல்களில் குழந்தை தத்தெடுப்புக்கான பின்புலங்களையும் காண்பிப்பதாகவும் உள்ளது.

குழந்தைகளை தத்தெடுத்தலைக் குறிக்கும் அரபு மொழியில் "அத்தபன்னி" என்ற சொல்லானது "தபன்னா" என்ற வினைச் சொல்லின் அடியாக பிறந்ததாகும். "தபன்னா" என்ற பதமானது தத்தெடுத்தல், சுவீகரம் கொள்ளல், மாற்றான் பிள்ளையை தனது பிள்ளையாக எடுத்துக் கொண்டு அவனை தனது இந்திரியத்திலிருந்து வந்த சொந்த பிள்ளையாக பார்த்தல், தனது சொந்த பிள்ளைக்குள்ள அனைத்து உரிமைகளையும் அந்த பிள்ளைக்கு வழங்குதல். தனக்கு சொந்தமில்லாத ஒருவரை தன் மகனாக எடுத்துக் கொள்ளல் என்பதாகும் என அடையாளப்படுத்தப்படுகின்றது (Kutti, 2014). குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்தலானது மனித வரலாற்றில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற ஒரு சம்பிரதாயமாக காணப்படுகிறது (தினகரன், *2011*). ஆயினும் நவீன காலத்தில் இவ்வாறான தத்தெடுப்பு நிலைப்பாடு பெரும் மாற்றத்திற்குள்ளாக்கப்பட்டது. அது அரசாங்க சட்ட முறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது என்று குறித்துக் காட்டப்பட்டுள்ளது (United Nation, 2009). புராதன கால மக்களிடையே தத்தெடுப்பானது மிக முக்கிய அங்கமாக திகழ்ந்தனை *4000*

ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் மற்றும் சட்ட மூலங்களிலிருந்து அறிய முடியுமாக உள்ளது (Zhang, 2006). எகிப்து, கிரேக்கம், ரோம் மற்றும் பெபிலோனியா என பல நாடுகளில் தத்தெடுக்கும் வழமை இருந்தமைக்கு ஏராளமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பாபிலோனியாவில் காணப்பட்ட ஹம்முராபியின் சட்டக் கோவையானது (Code of Hammurabi) தத்தெடுப்பு பற்றிக் குறிப்பிடும் ஆரம்ப கால சட்ட இலக்கியமாக காணப்படுகின்றது. கி.பி 18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் எழுதப்பட்ட இச்சட்டமானது நவீன கால தத்தெடுப்பு சட்டத்திற்கு பொருத்தமான பல்வேறு அம்சங்களை கொண்டமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, உயிரியல் பெற்றோரின் சம்மதத்துடன் செயல்படுத்தப்படும் சட்ட ஒப்பந்தமே தத்தெடுப்பு என வரையறுக்கின்றது. இங்கு பிறக்கும் குழந்தைக்கு வழங்கப்படும் அதே உரிமைகளை தத்தெடுக்கும் குழந்தைக்கும் வழங்க வேண்டும் என குறித்துக் காட்டப்படுகின்றது. இருந்த போதிலும் இச்சட்டக் கோவையில் தற்கால நடை முறைக்கு முற்றிலும் மாற்றமான பல சட்ட ஏற்பாடுகள் (Provisions) காணப்பட்டதாக ஆய்வுகள் காண்பிக்கின்றன (United Nation, 2009).

அக்காலத்தில் தத்தெடுக்கப்பட்ட அக்குழந்தை தனது உயிரியல் பெற்றோரிடம் திரும்பிச் செல்ல முயற்சித்தால் மிகக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டதுடன் அக்குழந்தை தனது வளர்ப்புப் பெற்றோருக்குரிய கடமைகளை முறையாக நிறைவேற்றவில்லை என்று கருதி தத்தெடுப்பு ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அக்காலத்தில் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகள் தாம் உண்மைக் குழந்தைகள் அல்ல என்ற உண்மையை வெளியே சொல்ல தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு சொன்னால் நாவுகள் வெட்டப்பட்டதாகவும் உயிரியல் பெற்றோர்களை தேடிச் சென்ற குழந்தைகள் குருடாக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இச்சட்டக் கோவையில் காணப்பட்ட பின்வரும் சில விதிமுறைகள் (Ben-Nun, 2016) நோக்கத்தக்கது. 185வது விதி "குழந்தை ஒன்றினை தத்தெடுத்து வளர்த்த பிறகு அக்குழந்தை தனது உயிரியல் பெற்றோரிடம் திரும்பிச் செல்ல முடியாது". 186விதி "ஆண் குழந்தையினை தத்தெடுத்து வளர்த்த பிறகு அக்குழந்தை தனது வளர்ப்புப் பெற்றோருக்கு ஏதேனும் ஊறு விளைவித்தால் அக்குழந்தையினை அதனது தகப்பன் வீட்டுக்கு திருப்பி அனுப்பப்படும்". 191விதி "வளர்ப்புப் பெற்றோர் தத்தெடுப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள விரும்பினால், அக்குழந்தைக்கு அவர்களது சொத்தில் மூன்றில் ஒரு பங்கினை கொடுத்து அனுப்ப வேண்டும். எனினும் வீடு, காணி மற்றும் தோட்டம் என்பவற்றினை அக்குழந்தையால் உரிமை கோர முடியாது" எனவும் பிரஸ்தாபிக்கின்றது.

ஆரம்ப காலத்தில் காணப்பட்ட கிரேக்கச் சட்டத்திலும் தத்தெடுத்தல் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. ஒரு தம்பதியினருக்கு முறையான குழந்தைகள் இருப்பின் அவர்கள் தத்தெடுக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். எனினும் தத்தெடுப்பின் பின்னர் ஆண் குழந்தைகள் பிறந்தால் தத்தெடுக்கப்பட்ட குழந்தைக்கும் பிறந்த குழந்தைக்கும் அப்பெற்றோரின் வாரிசுத் சொத்துக்கள் சமமாக பிரிக்கப்பட்டு வழங்கப்படுவதுடன் தத்தெடுப்பு ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றன (Bernal, 2007). புராதன ரோம காலத்தின் தத்தெடுப்பு நடைமுறை பற்றி "கோடக்ஸ் ஜஸ்டினியானுஸ்" (Codex Justinianus) இல் முறையாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. ரோமப் பேரரசர்கள் ஆண் குழந்தைகளை தத்தெடுத்து வளர்த்து வந்ததாக குறிப்பிடப்படுகின்றது. அக்காலத்தில் சிறு குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கும் பழக்கம் மிக அரிதான ஒன்றாக காணப்பட்டதாகவும், அனாதைக் குழந்தைகளை தத்தெடுத்து அடிமைகளாக பயன்படுத்தியதாகவும் சுட்டிக்காட்டப் படுகின்றது (United Nation, 2009).

சீனாவில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் என்பன இரு வேறு காரணங்களுக்காக தத்தெடுக்கப்பட்டன. ஆண் வாரிசு இல்லாத பட்சத்தில் ஆண் குழந்தைகள் தத்தெடுக்கப்பட்டனர். மேலும் வாரிசுகள் இருக்கும் பட்சத்தில் பெண் குழந்தைகளை தத்தெடுப்பதன் மூலம் அவர்களை மருமகள் ஆக்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது (Zhang, 2006). இந்தியாவில் தத்தெடுப்பு நிறுவனப்படுத்தப்படுவதற்கு முன் குடும்பத்துக்குள் மற்றும் சொந்தத்துக்குள் தத்தெடுக்கும் வழமை நீண்ட காலமாக இருந்து வந்ததாக அறியமுடிகின்றது. மேலும் தத்துக் கொடுத்த பின் அக்குழந்தை தனது தாய் தந்தையருடன் எந்த உறவும் பேணக் கூடாது என்ற கண்டிப்பான நடைமுறை இருந்திருக்கிறது புலனாகின்றது (Efrat et al, 2015).

தத்தெடுத்தல் என்பதற்கு பல வரைவிலக்கணங்கள் கொடுக்கப்படுகின்றன. தத்தெடுத்தல் என்பது தத்தெடுக்கும் தம்பதியினர் அல்லது ஒரு நபரிடையே பெற்றோர்-குழந்தை உறவை உருவாக்கும் சட்ட நிறுவனம் ஆகும். அதனால் அக்குழந்தை தத்தெடுத்த பெற்றோர்களின் குடும்பப் பெயர் மற்றும் சொத்துக்களை அவர்களின் அதிகாரத்துக்குட்பட்ட வகையில் பெறுகின்றது. குழந்தையின் உயிரியல் பெற்றோரிடமிருந்து அவர்களின் உரிமைகளை சட்ட முறைகளின் ஊடாக நிரந்தரமாக மாற்றும் நிகழ்வாகும் என குறிப்பிடப்படுகின்றது (Muslim Women's Shura Council, 2011) .தத்தெடுத்தலானது ஒரு குழந்தையினை சட்ட ரீதியான திருமணத் தொடர்புகளின்றி எடுத்து, அதன் தந்தை யாரெனத் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும் பெற்றோர்-குழந்தை உறவினை வழங்கி வளர்க்கும் செயற்பாடாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது (Mazahir, 2010).

தத்தெடுத்தலானது சட்ட ரீதியான ஒரு செயல் முறையாகும். இதனால் குழந்தையின் நலன்கள் பாதுகாக்கப்படுவதுடன், பிறப்பு பெற்றோர்களால் கைவிடப்பட்ட குழந்தைகள், மற்றொரு குடும்பத்தின் நிரந்தர உறுப்பினர்களாக மாறுகின்ற செயற்பாடாகும். அக்குழந்தையானது பிறந்த குடும்பத்துடன் மரபணு மற்றும் உளவியல் தொடர்புகளை பேணும் அதே வேளை அதனது பெயர் மற்றும் ஏனைய உரிமைகள் அனைத்தும் வளர்ப்புப் பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொள்ளும் முறை தத்தெடுப்பு என விளக்கப்பட்டுள்ளது (Wrobel et al, 2009). மேலும் தம்பதியினர் அல்லது ஒரு தனிநபருக்கு இடையே பெற்றோர் குழந்தை உறவை உருவாக்கும் ஒரு சட்ட நிறுவனமாக தத்தெடுத்தல் என அடையாளப்படுத்தப்படுகின்றது. இது ஒரு உணர்ச்சி சார்ந்த ஒரு செயல்முறையாக இருப்பதுடன் தத்தெடுக்கப்பட்ட அக்குழந்தையானது வளர்ப்புப் பெற்றோர்களின் சொத்துக்கள் மற்றும் அவர்களின் குடும்ப பெயர்களை பெறும் ஒரு நிலையாகும். இக்குழந்தையானது அநாதையாகவோ, கைவிடப்பட்டதாகவோ, வெளிநாட்டிலிருந்தோ அல்லது உள்நாட்டிலிருந்தோ மற்றும் உறவினர் களிடமிருந்தோ பெறப்பட்டதாக இருக்க முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (United Nation, 2009).

தத்தெடுப்பு என்பது ஒரு நலன் சார்ந்த செயல்முறையாகும். இது சட்ட பூர்வமாக, உயிரியல் பெற்றோரிடமிருந்து அவர்களின் அனைத்து விதமான உரிமைகளையும் பொறுப்புகளையும் நிரந்தரமாக மற்றொரு பெற்றோர்களுக்கு மாற்றும் முறையாகும். இதன் மூலம் அக்குழந்தையானது, வளர்ப்புப் பெற்றோரின் குடும்பப் பெயர், அடையாளம் மற்றும் வாரிசு சொத்துக்களில் சொந்தக் குழந்தை போலவே கருதப்படும் நிலையாகும் (Oladokun, et al, 2009). ஒரு குழந்தையினை அதிகார பூர்வமாக வாரிசாக்குவதன் மூலம் குழந்தையின்மை எனும் பிரச்சினைக்கு தீர்வு காணும் வழிமுறையாக காணப்படுவதாக அடையாளபடுத்தப்பட்டுள்ளது. இதனால் அக்குழந்தையின் மீதான உரிமை அதன் வளர்ப்புப் பெற்றோருக்கே முழுமையாக அளிக்கப்படும் செயற்பாடாகும் என குறித்துக் காட்டப்பட்டுள்ளது (Chinyere, 2013). தத்தெடுத்தல் என்பது உத்தியோகபூர்வ இடமாற்றம் என அழைக்கப்படுகின்றது. உயிரியல் பெற்றோரிடமிருந்து, அக்குழந்தையின் அனைத்து விதமான உரிமைகள் மற்றும் கடமைகள் என்பவற்றினை வளர்ப்புப் பெற்றோருக்கு மாற்றும் செயற்பாடாகும். இதன் மூலமாக வளர்ப்புப் பெற்றோர், அக்குழந்தையின் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்வதுடன் அதன் வளர்ப்பு, உடல், உள மற்றும் நிதி ரீதியாக அவர்களால் ஆதரவு வழங்கப்படும் செயற்பாடு எனப்படுகின்றது (Barbara, 2009).

குழந்தையை தத்தெடுத்து வளர்த்தல் என்பது, குழந்தைப் பேறின்மை போன்ற காரணங்களுக்காக வேறொரு பெற்றோருக்குப் பிறந்த குழந்தையை தனது குழந்தையாகக் கருதி, தனது சொந்தக் குழந்தையாக வளர்ப்பதனை குறித்து நிற்பதாகும் (Rifath et al, 2019). வளர்ப்புப் பெற்றோர்-குழந்தை உறவில் ஏற்படும் சட்டபூர்வமான உருவாக்கமாக தத்தெடுத்தல் காணப்படுவதுடன், வளர்ப்புப் பெற்றோரிடமிருந்து அக்குழந்தைக்கு அனைத்து விதமான பொறுப்புக்கள் மற்றும் சலுகைகளையும் ஏற்படுத்தும் ஒரு முறையாகும். அவ்வளர்ப்புக் குடும்பத்தில் மரபணு உறவினைப் பொருட்படுத்தாமல் அக்குடும்பத்தின் சந்ததியாகவே வளர்ப்புக் குழந்தையினை கருதும் நிலையை தத்தெடுத்தல் என சுட்டிக்காட்டுகின்றனர் (Adewunmi, 2012). குழந்தையின் உயிரியல் பெற்றோர் அல்லாத வேறு ஒரு தம்பதியினர் அல்லது நபருடனான உணர்ச்சி சார்ந்த இணைப்பாகும். இதன் மூலம் உயிரியல் பெற்றோருடனான உறவினை முற்று முழுதாக துண்டித்து, வளர்ப்புப் பெற்றோரின் வாரிசுகளில் பங்கு பெற்றுக் கொள்ளும் செயற்பாடு தத்தெடுத்தல் என குறிப்பிடப்படுகின்றது (Kutti, 2014).

ஒவ்வொரு சிறுவனும் தனது அடிப்படை தேவைகளை பெற உரிமை உள்ளவன் எனவும் நாம் அவற்றை ஒவ்வொரு பிள்ளைக்கும் வழங்குவதில் முனைப்பாக இருக்க வேண்டும் எனவும் *1989*

இல் ஐக்கியநாடுகள் ஸ்தாபனத்தின் சிறுவர் உரிமை சாசனத்தில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. *1993* ஆம் ஆண்டு ஹேக் தத்தெடுப்பு மாநாட்டில் (Hague Adoption Convention) குழந்தைகளின் நலனுக்காகவும் சர்வதேச சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அவர்களது அடிப்படை உரிமைகளுக்காகவும், சட்ட ரீதியற்ற குழந்தை தத்தெடுப்பை தடுப்பதற்காகவும் பல விதிமுறைகள் அமுலாக்கப்பட்டது. இது போன்ற பல மாநாடுகள் உலகெங்கிலும் இடம்பெற்று வந்ததாக தெரிவிக்கபபடுகின்றது (United Nation, 2009). இது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் பிள்ளைகளை கைவிடும் நிலைமை, பிள்ளைகளை பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கல் மற்றும் ஊழியர் சுரண்டல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இன்று பிள்ளைகளை கடத்தி விற்பனை செய்வதுடன் பிள்ளைகளைத் தவறான பாவனைக்கும் பயன்படுத்துகின்றனர் என ஆய்வு முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றது (Onayemi, 2019).

குழந்தைகளை தத்தெடுக்கும் செயன்முறை ஜாஹிலிய்யாக் காலத்தில் மற்றும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலும் இருந்தது. அல்குர்ஆன் இந்த சமூக மரபை தடைசெய்ததனை வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன (Mazahir, 2010; Kutti, 2014). தத்தெடுத்துக் கொள்ளுதல், பரஸ்பர ஒப்பந்தங்கள் அடிப்படையில் அந்நியரை குடும்ப உறவு போல ஆக்கிக் கொள்ளுதல் பாலுறவுக்காகவும், வேறு தேவைகளுக்காகவும் 'நிக்காஹ் அல்லாத சின்னவீடு' வைத்துக கொள்ளுதல் முதலிய எதுவாய் இருப்பினும் அவை இஸ்லாமிய குடும்ப கட்டுமானத்தில் அடங்குவது கிடையாது (Jamaluddin, 2001). எனினும் இன்று சில முஸ்லிம் நாடுகள் கூட இம் முறையினை அந்நாடுகளில் செயற்படுத்த அனுமதியளித்துள்ளனர் என ஆய்வுகள் (United Nation, 2009) உறுதிப்படுத்தியுள்ளன. இலங்கை வாழ் மக்கள் மத்தியில் குழந்தை தத்தெடுப்பு எனும் நடைமுறை காணப்படுவது போன்று முஸ்லிம்கள் கணிசமாக வாழும் அம்பாறை மாவட்டத்திலும் இச்செயற்பாடு புரையோடிப்போய் இருக்கிறது. குழந்தை தத்தெடுப்பு தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்கள் தொடர்பில் போதியளவு அறிவின்மையை எடுத்துக் காட்டுகின்றது என்ற வகையில் இவ்வாக்கம் குழந்தை தத்தெடுப்பு தொடர்பான இஸ்லாமிய மாற்றீடுகளை கோட்பாட்டு ரீதியாக விளக்க முனைகின்றது.

## 2. ஆய்வு முறையியல்

பண்பு ரீதியான ஆய்வு வடிவத்தை தழுவிய இவ்வாய்வு முன்னைய இலக்கியங்களின் மீளாய்வை அடிப்படையாகக் கொண்டது. ஏலவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்ட குழந்தை தத்தெடுப்பு தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பவற்றுடன் இஸ்லாமிய மூல ஆவணங்களான அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய இலக்கியங்கள், ஆக்கங்கள் போன்றன இங்கு மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பிரத்தியேகமாக குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு பகரமாக இஸ்லாம் முன்வைக்கும் மாற்றீடுகளை இவ்வாய்வு பகுப்பாய்கிறது. இது தவிர விமர்சன நோக்கத்திற்காக குறுக்கு வெட்டுமுக முறையியல் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் குழந்தை தத்தெடுப்பு தொடர்பான கோட்பாடு ரீதியான அமைப்பு திட்டத்தினை நிறுவிக் கொள்ள இவ்வாய்வு துணை செய்கின்றது.

## 3. கண்டறிதல்களும் கலந்துரையாடலும்

மனித நலன்களை உயரிய நிலையில் பேணி அவற்றைப் பாதுகாத்து அவர்களுக்கு வரவிருக்கும் தீங்குகளை விட்டும் களைவதே இஸ்லாமிய ஷரீஆவின் இலட்சியங்களில் ஒன்றாகும். அந்தவகையில் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதில் மனிதனின் ஒரு சில அபிலாசைகள் நிறைவேறிய போதும், அதனால் மனித நலனுக்கு ஏற்படும் பாதக விளைவுகள் அதிகம் எனக் கருதும் இஸ்லாம் அதனை முற்று முழுதாக தடை செய்கிறது. பதிலாக இஸ்லாம் அதற்கான மாற்றீடுகளை ஏற்படுத்தத் தவறவில்லை. எனவே தான் இஸ்லாம் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு பகரமாக முன்வைக்கும் மாற்றீடுகளை இலக்கியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளன.

### *3.1 அர்-ரழா: பாலூட்டுதல் மூலம் குழந்தையாக மாறுதல்*

குழந்தை தத்தெடுப்புக்கு ஏற்ற நடைமுறையாக அர்-ரழா எனும் பாலூட்டுதல் மூலம் குழந்தையாக மாறுதல் அமைய முடியும். அரபு மொழியில் அர்-ரழா என்றால் பாலூட்டல் (Sucking) என்று பொருளாகும். பரிபாஷையில் 'ஒரு குழந்தைக்கு அதனது தாய் அல்லாத வேறொரு பெண் பாலூட்டுவதைக் குறிக்கும்'. இஸ்லாத்திற்கு முந்தைய அரேபியாவில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்காக தாய்மார்களை வேலைக்கு அமர்த்தும் ஒரு நடைமுறை இருந்தமையினை அல்குர்ஆனிய வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. நபியவர்கள் தனக்கு பாலூட்டிய செவிலித் தாயான ஹலீமாவை தனது தாய் போலவே கருதி செயற்பட்டார்கள் (Kutti, 2014). இவ்வாறான நடைமுறைக்கு அல்குர்ஆன் ஒப்புதல் அளித்ததனை கீழ் வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவுபடுத்துகின்றது. *"பின்வரும் பெண்களை மணம் முடிப்பது உங்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளது. உங்கள் தாய்மார்கள், உங்கள் புதல்விகள், உங்கள் சகோதரிகள், மற்றும் உங்கள் தந்தையின் உடன் பிறந்த சகோதரிகள், உங்கள் அன்னையின் உடன் பிறந்த சகோதரிகள், மேலும் சகோதரனின் புதல்விகள்,சகோதரியின் புதல்விகள்,மேலும் உங்களுக்கு பாலூட்டிய செவிலித்தாய்மார்கள், மேலும் உங்கள் பால்குடிச் சகோதரர்கள்...."* (அல்குர்ஆன் 4: 23).

எனவே பால் குடியால் உருவாகும் உறவானது இரத்தத்தின் மூலம் உருவாகும் உறவு போன்றது என இஸ்லாம் எடுத்தியம்புவது தெளிவாகின்றது. ரஸூல் (ஸல்) அவர்கள் இது தொடர்பாக பின்வருமாறு கூறினார்கள்: *"இரத்த உறவின் மூலம் யாரெல்லாம் மஹ்ரமிகளாக மாறுகின்றார்களோ அவர்கள் அனைவரும் பால்குடி உறவாலும் மஹ்ரம்களாக மாறுகின்றனர்"* (ஸஹீஹ் புகாரி). குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதற்கு பகரமாக பால்குடி மூலம் உறவாக மாற்றிக் கொள்வதால் அங்கே இரண்டு விதமான சட்டங்கள் பிறக்கின்றன: திருமணம் தொடர்பான சட்டம்- இரத்த உறவில் யாரெல்லாம் திருமணம் முடிக்க அனுமதிக்கப்படவில்லையோ அவர்கள் அனைவரும் பால்குடி உறவினாலும் தடைசெய்யப்படுகின்றனர். மஹ்ரம் தொடர்பான சட்டம் - இரத்த உறவில் யாரெல்லாம் மஹ்ரம்களாக மாறுகிறார்களோ அவர்கள் அனைவரும் பால்குடி உறவாலும் மஹ்ரம்களாக மாறுகின்றனர். பாலூட்டப்படும் குழந்தையின் வயதெல்லை தொடர்பாக இஸ்லாமிய சட்ட வல்லுனர்கள் மத்தியில் பல கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றின் பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்து, பாலூட்டப்படும் குழந்தை இரண்டு வருடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என குறிப்பிடுவது ஈண்டு சுட்டிக்காட்டத்தக்கது.

பால்குடி உறவானது, குடும்பத்திற்கும் வளர்ப்பு குழந்தைகளுக்கும் இடையில் இரத்த உறவை ஏற்படுத்தினும், அது அக்குழந்தைகள் மீது வாரிசுச் சொத்துரிமையினை ஏற்படுத்தாது என்பது பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துநிலையாகும் (Kutti, 2014; Buchler, 2018; Rifath, et al, 2019). எனவே அல்லாஹ் வாரிசுதாரர்களையும் அவர்களுக்குரியபங்குகளையும் மிகத் தெளிவாகவே கூறியுள்ளான். எனவே குறித்த வளர்ப்புப் பிள்ளையானது எந்தவொரு உரிமையுமின்றி வாரிசுச் சொத்தில் பங்கு பெறுவதானது இஸ்லாத்தின் வழிகாட்டுதலுக்கு முற்றிலும் முரணானது. வாரிசுச் சொத்துக்களில் தவறுகள் ஏற்படும் போது கொடிய நரக வேதனையை ஏற்க வேண்டி வரும் என அல்லாஹ் குறிப்பிட்டுக் காட்டுகின்றான் (Rifath et al, 2019; Yassari, 2015; Mansoor, 2021) என்பது நோக்கத்தக்கது.

### *3.2 அல்-கபாலா- பொறுப்பேற்றல்*

குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு மாற்றீடாக இஸ்லாம் முன்வைக்கும் இன்னுமொரு தீர்வுதான் குழந்தைகளைப் பொறுப்பேற்று பராமரித்து பயிற்றுவித்தல் என்பதாகும். 'கபாலா' என்றால் சட்டப்பூர்வ வளர்ப்பு, பொறுப்பு' என பொருள்படும். அதாவது ஒருவர் இன்னொருவரை தன் பொறுப்பில் எடுத்து அவருக்கான முழுப் பராமரிப்பு செலவினங்களையும் வழங்குவதைக் குறிக்கும். இது உணவளித்தல் என்ற பொருளில் 'கபல' எனும் மூல வார்த்தையிலிருந்து தோற்றம் பெற்றது. இஸ்லாம் இந்த உயரிய செயலை வரவேற்கின்றது. குழந்தையின் பரம்பரையினை மாற்றாமல் அக்குழந்தையினை பராமரிப்பதனை நோக்கமாக கொண்ட ஒரு செயற்பாடே பொறுப்பேற்றல் என ஜமீலா பார்காசின் ஆய்வு முடிவுகள் குறித்துக் காட்டுகின்றன (Muslim Women's Shura Council, 2011).

இஸ்லாம் அநாதைகளை ஆதரவளிப்பதனை தூண்டுகின்ற மார்க்கம் என்ற வகையில் அதன் கரிசனை மிக முக்கியமானதாகும். யதீம் (அநாதை) என்பது தந்தையை இழந்த குழந்தை என பொருள்படுகின்றது. "*நானும் அனாதையை கவனித்தவரும் நாளை மறுமையில் இவ்வாறு இருப்போம் என்று இரு விரல்களையும் இணைத்துக் காட்டினார்கள்*" நபிமொழியும் (புகாரி, 6005). "*மேலும் தாம் எதைச் செலவிட வேண்டும் என்று பெற்றோருக்காகவும், உறவினருக்காகவும், அனாதைகளுக்காகவும், ஏழைகளுக்காகவும், நாடோடிகளுக்காகவும் (செலவிட வேண்டும்) நீங்கள் எந்த நன்மையைச் செய்தாலும் அல்லாஹ் அதை அறிந்தவன் எனக் கூறுவீராக!*" குர்ஆன் வாசகமும் (அல்குர்ஆன், 2: 215) அநாதைகள் பராமரித்து ஆதரளிப்பதன் பெறுமானத்தை உறுதிப்படுத்துகின்றன. .

அபூபக்கர் (ரழி) அவர்கள் மிஸத் பின் அஸாஸா (ரழி) அவர்களை தனது பராமரிப்பில் வைத்திருந்தார்கள். அவருக்கான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தார்கள் என குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு பொறுப்பேற்பதனால் அநாதைகளது, ஆதரவற்றவர்களது நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. மகாஸிது ஷரீஆ பாற்பட்ட ஷரீஆவின் இலட்சியங்களில் மிகப் பிரதானமானதும் அடிப்படையானதுமான பணி மனித நலன்களைப் பாதுகாப்பதேயாகும். அந்தவகையில் கபாலா எனும் பொறுப்பேற்றல் என்கின்ற விடயம் முழுக்க முழுக்க மனித நலன்களைப் பாதுகாப்பதற்காகவே அமைகின்றது (Assim, 2018; Alzahrani, 2019; Rifath, et al, 2019). இஸ்லாமிய சட்டம் அங்கீகரித்த கபாலா (பொறுப்பேற்றல்) எனும் செயற்பாட்டை பல நாடுகள் அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது கைவிடப்பட்ட குழந்தை என நீதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்ட குழந்தையை பொறுப்பேற்று பராமரிக்க முடியும் என்பது நோக்கத்தக்க அம்சமாகும் (Alzahrani, 2019). இம்முறை மூலம் வளர்க்கப்படும் குழந்தைக்கு வாரிசுத் சொத்து கிடைக்கப்பெறமாட்டாது என்பது இஸ்லாமிய சட்ட நிபுணர்களின் ஒருமித்த கருத்தாகும் (Kutti, 2014).

இது ஒரு முஸ்லிம் தம்பதியினர் திருமணமாகி மூன்று வருடங்களுக்குப் பிறகு குழந்தையினைப் பொறுப்பேற்றல் (கபாலா) நடைமுறையினை செயற்படுத்த முடியுமாகும். இதன் மூலம் அக்குழந்தையின் தகப்பனின் பெயர் மற்றும் பரம்பரை என்பன மாற்றப்படாது என்பது முக்கிய அம்சமாகும். பஹ்ரைனில், அமைச்சரவையானது பராமரிப்புச் சட்டத்தினை (Fosterage Act) சமீபத்தில் இயற்றி, வளர்ப்புப் குடும்பங்களில் இருக்கும் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கத் தேவையான நடைமுறைகளை சுட்டிக்காட்டியது. புரூணை தாருஸ் ஸலாமில் 2001 ஆம் ஆண்டு இஸ்லாமிய குழந்தை தத்தெடுப்புச் சட்டம் (Islamic Adoption of Children Act, 2001) அரசு உருவாக்கியது. இச்சட்டத்தின் படி, பராமரிப்பாளர் தனது குழந்தைக்கு அவரது சொத்தில் மூன்றில் ஒரு பங்கினை வழங்க முடியும் என்று ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேலும் சூடானில், குடும்பத்தினை இழந்த முஸ்லிம் குழந்தையினை (கபாலா) பொறுப்பேற்றல் மூலம் பராமரிக்க முடியும் என குறிப்புக்கள் எடுத்திக்காட்டுகின்றன (Rotabi et al 2017; Muslim Women's Shura Council, 2011). இஸ்லாம் தடைசெய்திருக்கின்ற தத்தெடுப்பை விட்டு விட்டு இவ்வாறு குழந்தைகளை பொறுப்பேற்று அவர்களது பராமரிப்பிற்கும் பயிற்றுவிப்பிற்கும் உதவுவது ஓர் உன்னத செயலாகும்.

### *3.3 அல்-முஸாஹரா- திருமணத்தின் மூலம் உறவாகமாற்றிக் கொள்ளல்*

குழந்தை தத்தெடுப்புக்கு அல்-முஸாஹரா எனும் திருமணத்தின் மூலம் உறவாக மாற்றிக் கொள்ளல் ஒரு மாற்றீடு. அல்-முஸாஹரா என்றால் மொழிக் கருத்தில் "தூரமாக இருந்த ஒருவர் நெருக்கமான உறவாக மாறுதல்" என பொருள்படும். பரிபாஷைக் கருத்தில் அல்-முஸாஹரா என்றால் 'தூரமான ஒருவர் திருமணத்தின் மூலம் நெருங்கிய உறவாக மாறுவதைக் குறிக்கும் (Alazhrani, 2009). ஆணும் பெண்ணும் சட்டரீதியாக தூய பரம்பரையை உருவாக்கிறது. இஸ்லாத்தில் ஒருவர் இன்னொருவரது உறவாக மாறுவதற்கு மூன்று சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அவை இரத்தத்தின் மூலமாகவும், திருமணத்தின் மூலமாகவும், பால் குடியின் மூலமாகவும் அமைகின்றன. இத்திருமணங்களில் நற்பாக்கியம், ஈடேற்றம், வாழ்க்கையின் வெற்றி போன்றன அமையப் பெற்றுள்ளது. இந்த ஒப்பந்தம் இறைவனால் ஏற்படுத்தும் மிக உறுதிமிக்கதாகும். இது இஸ்லாமிய சமூகத்தை கட்டியெழுப்பக் கூடிய முஸ்லிம் குடும்பங்களை உருவாக்குவதன் அடிப்படையாகும் (Yassari, 2015; Alazhrani, 2009; Rifath et al, 2019). திருமணமானது நபி வழியாகவும் இருக்கிறது. "*இன்னும், நீங்கள் அவர்களிடம் மன ஆறுதல் பெறுவதற்குரிய (உங்கள்) மனைவியரை உங்களிலிருந்தே உங்களுக்காக அவன்*

*படைத்திருப்பதும் உங்களுக்கிடையே உவப்பையும், கிருபையையும் உண்டாக்கியிருப்பதும் அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும்''* (அல்குர்ஆன், 30: 21)

எனவேதான், இந்த குறிப்பிட்ட உறவுகள் மூலம் சிலர் திருமணம் முடிப்பதற்கு தடை செய்யப்பட்ட மஹ்ரம்களாக மாறுகின்றனர். இவ்வாறான வழிமுறைகளில் உறவாக மாறுவதால் ஒவ்வொருவருக்கும் சில உரிமைகளும் கடமைகளும் உருவாகின்றன. ஆனால் தத்தெடுத்து வளர்ப்பதனால் இவ்வாறான எவ்வித மாற்றங்களும் ஏற்படுவதில்லை. எனவே தான் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை தடைசெய்த இஸ்லாம் அதற்கான சிறந்த மாற்றீடுகளில் ஒன்றாக திருமணத்தின் மூலமாக உறவாக மாற்றிக் கொள்வதை ஆக்கியுள்ளது.

### *3.4 அல்-முஆகாத்- மார்க்கத்தில் சகோதரனாக மாற்றிக் கொள்ளல்*

இவ்வாறு சகோதரனாக மாற்றுவது என்பது ஒருவர் தான் விரும்பும் ஓர் சகோதரனை தனக்கு மிகவும் நெருக்கமான ஒரு சகோதரனாக மாற்றிக் கொள்வதைக் குறிக்கும் (Yassari, 2015). அடிப்படையில் இஸ்லாத்தில் அனைவரும் சகோதரர்களாவர். *''மு∴மீன்கள் அனைவரும் சகோதரர்களே!''* (ஸஹீஹ் அல்-புகாரி: 6385) இது அனைத்து முஸ்லிம்களையும் குறிக்கும். ஆனால் அல்-முஆகாத் எனும் வழிமுறையில் சகோதரனாக மாறுவது என்பது இஸ்லாத்தின் பொதுவான சகோதரத்துவத்தை விட அந்தஸ்தில் உயர்ந்த ஈமானிய சகோதரத்துவ வாஞ்சையையே அது குறித்து நிற்கின்றது. பிறர் குழந்தைகளைத் தத்தெடுத்து தன் குழந்தையாக மாற்றிக் கொள்வதை தடைசெய்த இஸ்லாம் அதே இடத்திலேயே அதற்கான மாற்றீடுகளில் ஒன்றாக அல்-முஆகாத் எனும் வழிமுறையினை எமக்கு காட்டித்தருகின்றது. ஸைத் பின் ஹாரிதா (ரழி) ரஸூல் (ஸல்) அவர்கள் ஸாலிம், அபூ ஹுதைபா (ரழி) அவர்களின் முஆகாதாக (மார்க்கத்தில் நெருங்கிய சகோதரனாக) மாறினார்கள் என்பதனை வரலாற்று சான்றுகள் குறித்துக்காட்டுகின்றன (Yassari, 2015).

ஒருவர் இன்னொருவருக்கு மவ்லாவாக மாறும் போது அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவரின் அனைத்து விதமான இன்ப துன்பங்களிலும் பங்கெடுக்கக் கூடியவர்களாக இருப்பர். அவர்களில் ஒருவரது உயிருக்கு, மார்க்கத்திற்கு அல்லது சொத்துக்கு ஏதேனும் பங்கம் ஏற்படுகின்ற பொழுது மற்றவர் அது தனது உயிருக்கும், மார்க்கத்திற்கும், மானத்திற்கும், சொத்திற்கும் ஏற்படும் பங்கமாகக் கருதி அவரைப் பாதுகாப்பார். இங்கு தான் பொதுவான இஸ்லாமிய சகோதரத்துவத்தை விட்டும் அல்-முஆகாத் எனும் மாற்றீடு வேறுபட்டு நிற்கின்றது (Rifath, et al, 2019). எனவே தான் குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை தடை செய்த இஸ்லாம் அதற்கான சிறந்த மாற்றீடுகளில் ஒன்றாக அல்-முஆகாத்தை முன்வைக்கின்றது.

### *3.5 அல்-வஸிய்யா- உயில் எழுதுதல்,மரணசாசனம்*

அல்-வஸிய்யா என்பது ஒருவர் தனது மரணத்தருவாயில் அல்லது அதற்கு முன்பு தனது அனந்தரகாரர்கள் அல்லாத மற்றவர்களுக்கு தனது சொத்தில் மூன்றில் ஒரு பகுதியை உயிலாக எழுதுவதைக் குறித்து நிற்கின்றது (Alazhrani, 2009). ஒருவர் இவ்வாறு உயில் எழுதி விட்டு மரணித்தால் அது அவரது சொத்திலிருந்து நிறைவேற்றப்படும். அவ்வாறு நிறைவேற்றுவது கடமையாகவும் மாறிவிடுகின்றது எனக் குறிப்பிடப்படுகின்றது (Yassari, 2015). ஆனால் அவர் வாரிசுச் சொத்தில் பங்குபெறும் ஒருவருக்கு இவ்வாறு உயில் எழுதி விட்டுச் சென்றால் அது நிறைவேற்றப்படமாட்டாது. ''*வாரிசுக்காரர்களுக்கு எந்தவித வஸிய்யத்தும் கிடையாது*'' என்பது நபிமொழியாகும். (அபூ தாவூத்) ஆயினும், யார் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கிறாரோ அவர் அதற்கு மாற்றீடாக அந்தக் குழந்தைக்கு உயில் எழுதி வைக்க முடியும் என்று சில ஆய்வாளர்கள் ஏகோபித்த முடிவாக அடையாளப்படுத்துகின்றனர் (Yassari, 2015., Alazhrani, 2009., Rifath, et al, 2019).

அவ்வாறு செய்வதனால் திருமண உறவின் மூலமோ அல்லது பால்குடி உறவின் மூலமோ கிடைக்கும் உறவை இவர் பெறமாட்டார். ஆனால் அந்த குழந்தையின் நலன் இங்கு பாதுகாக்கப்படும். ''*உங்களுடைய மார்க்கத்தில் சகோதரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள்''* இந்த திருமறைவசனத்திற்கு இமாம் இப்னு கஸீர் (ரஹ்) அவர்களின் விளக்கவுரை 'அவர்களுக்கு வாரிசாக செல்வதை குறிப்பதாகவும் அந்த வாரிசுரிமை உதவியாகவோ, நன்மையாகவோ, நல்ல உறவாகவோ, அவர்களுடன் அழகிய முறையில் நடப்பதாகவோ, வஸிய்யத் ஆகவோ இருக்கலாம்' என்பதாகும் (Rotabi, 2017). இமாம் ஸயீத் இப்னு முஸைய்யிப் இது பற்றி

கூறும் போது: 'இந்தவசனம் இறங்கிய போது யாரெல்லாம் குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்த்துக் கொண்டிருந்தார்களோ அவர்கள் அந்தக் குழந்தைகளை தமது மார்க்கத்தின் சகோதரர்களாக மாற்றிக் கொண்டார்கள். மேலும் தமது உறவினர்கள் தமது சொத்தில் அனந்தரக்காரர்களாகவும் தாம் வளர்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு தமது சொத்தில் வஸிய்யத் எனும் உயில் எழுதியும் வைத்தார்கள்' என்பதை சான்றுகள் எடுத்தியம்புகின்றன (Rotabi, 2017., Muslim Women's Shura Council, 2011).

''*வஸிய்யத் செய்யத்தக்க பொருள் வளம் பெற்றவராக ஒருவர் இருந்தால் அப்பொருள் அவருக்குக் கிடைத்து இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள் வஸிய்யத் எழுதப்பட்டு விட வேண்டும்*'' என நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள் (புகாரி, முஸ்லிம், முஅத்தா, திர்மிதி, அபூதாவூத், நஸாஈ). மேலும் இப்னு உமர் (ரழி) அவர்கள் ரஸுல் (ஸல்) அவர்களிடம் நான் இதைக் கேள்விப்பட்ட பின்னர் எனது வஸிய்யத்தை நான் எழுதி வைத்து விட்டேன். எழுதிவைக்காமல் ஓர் இரவு கூடக் கழித்ததில்லை எனவும் குறிப்பிடுகின்றார்கள் (புகாரி, முஸ்லிம்,அபூ தாவூத்,திர்மிதி இப்னுமாஜா). ''*வஸிய்யத் செய்யத்தக்கபொருளாதாரம் ஒரு முஸ்லிமிடம் இருக்க இரண்டு இரவுகள் கடக்கலாகாது*'' என நபி (ஸல்) அவர்களின் குறிப்பு அஹ்மதில் பதிவாகியுள்ளது.

''*வஸிய்யத்தை கேட்ட பின்னர் எவரேனும் ஒருவர் அதனை மாற்றினால் நிச்சயமாக அதன் பாவமெல்லாம் யார் அதை மாற்றுகின்றாரோ அவர்களையே சாறும். நிச்சயமாக அல்லாஹ் யாவற்றையும் கேட்பவனாகவும் அறிபவனாகவும் இருக்கின்றான். ஆனால் வஸிய்யத் செய்பவரிடம் (பாரபட்சம் போன்ற) தவறோ அல்லது மனமுரண்டான அநீதமோ இருப்பதை அஞ்சி ஒருவர் (சம்பந்தப்பட்டவர்களிடையே) சமாதானம் செய்து அந்த (வஸிய்யத்தை) சீர் செய்தால் அ(ப்படிச் செய்ப)வர் மீதுகுற்றமில்லை. நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும் நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கிறான்.*'' (*அல்குர்ஆன், 2: 180, 181, 182*). இதிலிருந்து வஸிய்யத்தின் முக்கியத்துவம் புலப்படுகின்றது. ஒருவர் தனது குடும்பத்திலுள்ள ஒரு குழந்தையினை எடுத்து, பெற்றோர்- குழந்தை என்ற உறவினை வழங்காமல் வளர்க்கும் போது அக் குழந்தைக்கு தனது வாரிசுத் சொத்தில் மூன்றில் ஒரு பங்கினை வழங்க முடியும் என சில ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர் (Alazhrani, 2009; Rifath et al, 2019). இதனை கட்டாய வஸிய்யத் எனவும் அழைக்கப்படுகின்றது. எனவே இதனை இஸ்லாம் தத்தெடுத்து வளர்ப்பதற்கான ஒரு சிறந்த மாற்றீடாக முன்வைக்கின்றது.

### *3.6 அல்-ஹிபா- அன்பளிப்பாக வழங்குதல்*

இஸ்லாமிய ஷரீஆவில் ஹிபத் (அன்பளிப்பு) தொடர்பில் பல்வேறு வழிகாட்டல்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு முஸ்லிம் தனது சகோதரனின் நலன்களைக் கருத்தில் கொண்டு அவனுக்கான அன்பளிப்புக்களை வழங்கும் போது அவர்களுக்கிடையில் பிணைப்பும் சகோதரத்துவமும் ஏற்படுவதற்கான வழியாக அது அமைந்து விடுகிறது. இஸ்லாம் என்பது தாராளத் தன்மையின் உறைவிடம், வாரி வழங்கிய அபூபக்கர்களை உருவாக்கிய உன்னதமார்க்கம். குழந்தை இல்லாதவர்கள் அல்லது மேலதிக குழந்தைகளின் பால் தேவையுள்ளோர் மீது குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்ப்பதை தடை செய்த இஸ்லாம் அதற்கான பிரதியீடுகளில் ஒன்றாக ஒருவர் தனது வாழ்நாளிலே தனது சொத்திலிருந்து இவ்வாறான ஆதரவற்ற பிள்ளைகளுக்கு அன்பளிப்பாக வழங்குதவதை அனுமதித்துள்ளது. ஹிபத் எனும் பதம் மொழியில் 'எவ்வித பிரதியீடுகளும் அற்ற அன்பளிப்பு' எனும் கருத்தைக் குறிக்கிறது. அதாவது அன்பளிப்புப் பெற்றவர் நலனடையும் நோக்கில் வழங்கப்படும் நலன் விரும்பல் செயற்பாடே அன்பளிப்பாகும் (Yassari, 2015).

நபி(ஸல்) அவர்களுக்கு மெல்லிய பட்டாலான அங்கி ஒன்று அன்பளிப்பாகத் தரப்பட்டது. அவர்கள் பட்டுத் துணியை (அணிவதைத்) தடை செய்து வந்தார்கள். மக்களோ அந்த அங்கி(யின் தரம் மற்றும் மென்மை)யைக் கண்டு வியந்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், ''*முஹம்மதின் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீதுசத்தியமாக! சொர்க்கத்தில் ஸஅத் இப்னு முஆத்துக்கு கிடைக்கவிருக்கும் கைக்குட்டைகள் (தரத்திலும் மென்மையிலும்) இதைவிடத் தரமானவையாயிருக்கும்*' என்று கூறினார்கள் (புகாரி, *2615*).

பிறருக்கு உதவி செய்வதனை தூண்டுகின்ற மார்க்கம் என்ற வகையில் அது பல வழிகாட்டுதல்களையும் எமக்கு வழங்கியுள்ளது. *''(நபியே!) அவர்களை நேர்வழியில் நடத்துவது உம் கடமையல்ல. ஆனால், தான் நாடியவர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகின்றான் இன்னும், நல்லதில் நீங்கள் எதைச் செலவிடினும், அது உங்களுக்கே நன்மைபயப்பதாகும். அல்லாஹ்வின் திருமுகத்தை நாடியே அல்லாது (வீண் பெருமைக்காகச்) செலவு செய்யாதீர்கள். நல்லவற்றிலிருந்து நீங்கள் எதைச் செலவு செய்தாலும், அதற்குரிய நற்பலன் உங்களுக்குப் பூரணமாகத் திருப்பிக் கொடுக்கப்படும் நீங்கள் அநியாயம் செய்யப்படமாட்டீர்கள்''* (அல்குர்ஆன்,2:272). மற்றும் *''நீங்கள் நேசிக்கும் பொருள்களிலிருந்து தானம் செய்யாத வரை நீங்கள் நன்மை அடையமாட்டீர்கள் எந்தப் பொருளை நீங்கள் செலவு செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதை நன்கறிந்தவனாக இருக்கின்றான்''* (அல்குர்ஆன்,3:92). மேலும் *''நீங்கள் அன்பளிப்புக்களைப் பரிமாறிக் கொள்ளுங்கள். அப்போது உங்களுக்கு மத்தியில் அன்பு அதிகரிக்கும்''* (அல்-அதப் அல்-முப்ரத்,594) என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள். இவை போன்ற வசனங்கள் சமூகம் மற்றும் தனிநபர் போன்றோர் பலனடைவதற்கான ஒழுங்குகளையே வகுத்துள்ளன. நம்மிடையே ஒற்றுமையும் பாசமும் மேலோங்க வேண்டும் என்பதற்காக இஸ்லாம் அழகான வழிமுறையினை கற்றுத்தருகின்றது.

## 4. முடிவுரை

எனவே இஸ்லாம் ஒருவிடயத்தில் அனுமதி மறுத்து, ஒரு கதவை அடைத்தால் இன்னும் பல கதவுகளை அவ்விடயத்தில் திறந்துவிட்டிருக்கும். குழந்தைகளை தத்தெடுத்து வளர்ப்பதை தடை செய்த இஸ்லாம் அவ்வாறு தத்தெடுப்பதால் அக்குழந்தைகள் பெற்றுக் கொள்ளும் பயன்களை தடை செய்யவில்லை. மாற்றமாக வேறு வழிகளினூடாக இவ்வாறான மாற்றீடுகளின் ஊடாக அப்பயன்கள் அவர்களை சென்றடைய வழிவகுத்தது. இவ்வாறு தத்தெடுப்பிற்கு மாற்றமான பல்வேறு வழிவகைகளை இஸ்லாம் எமக்கு காட்டித்தந்துள்ள போதிலும் எமது சமூகத்திற்கும் அதன் நடைமுறைக்கும் ஏற்றவாறான மாற்றீட்டு வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலமே வினைத்திறனான சமூக கட்டமைப்பினை உருவாக்கமுடியும். இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தையினை தத்தெடுத்து வளர்க்கும் போது பாலூட்டுவதன் மூலம் அக்குழந்தையினை மஹ்ரம் ஆக்கிக் கொள்ள முடியும் எனபது பல அறிஞர்களின் ஏகோபித்த முடிவாகும். எனினும் இதற்கான பல விதிமுறைகளும் காணப்படுகின்றது. அது போல அல்-கபாலா எனும் பொறுப்பேற்று வளர்த்தல் என்பதன் மூலம் பல குழந்தைகள் பயனடைவதற்கான வாய்ப்பினை இது வழங்குவதாக ஆய்வுகளின் மூலம் அறிய முடிகின்றது. ஆகவே இவ்வாறான வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் ஒரு குழந்தை சிறப்பாக வளர்வதுடன் அதன் பரம்பரை பாதுகாக்கப்படுகின்றன. இதனையே இஸ்லாம் விரும்புகின்றது. வஸிய்யத், ஹிபா போன்ற நற்காரியங்களை இக்காலத்தில் யாரும் முன் வந்து செய்வார்களா என்பது கேள்விக்குறியே. எனினும் தத்தெடுத்த குழந்தைகளுக்கு வாரிசுத் சொத்தில் வசிய்யத் செய்வது கட்டாயம் என பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே தத்தெடுத்து வளர்த்து அல்லாஹ்வின் தண்டனையை பெற்றுக் கொள்வதனை விடவும் இவ்வாறான இஸ்லாம் காட்டிய வழிகளை மேற்கொள்வதினூடாக ஈருலகிலும் வெற்றிபெறமுடியும்.

## உசாத்துணைகள்

Adewunmi, A, A., Ett, E, A., Tayo, A, O., Robiv, K, A., Akindele, R, A., Otture, T, A., Akinlusi, F, M. (2012). Factors Associated with Acceptability of Child Adoption as Management Optionfor Infertility Among Women in Developing Country. *International Journal of Women's Health*, 4, 365–372.doi: 10.2447/ISWH.531598/Rm ID: 22927767.

Alzahrani, O. (2009). The Adoption of Children: An Exploration of Islamic Law in Kingdom of Saudi Arabia and How It Compares to The International Standards Set By The Hague Convention on The Protection of Children And Co-Operation In Respect of Inter-Country Adoption (Unpublished doctoral dissertation). University of Pittsburgh. http://d-scholarship.pitt.edu/34163/

Assim, H. (2018). Adoption in Islam. [Video File]. You Tube. https://www.youtube.com/watch?v=y-Jq8JKZjDU&ab_channel=assimalhakeem

Barbara, Y. 2009. Placing the "GiftChild" in Transnational Adoption.*The Law and Society Association,* 36(2), 227-256http://www.jstor.ory/stable/1512176

Ben-Nun, L. (2016.) *Adopted Children*. Israel: B.N.Publication House.https://www.researchgate.net/publication/296485621_ADOPTED_CHIL DREN

Bernal, R., Luojia, H., Chiaki, Moriguchi. Nagypel, E. (2007). Child Adoption in the United States: Historical Trends and the Determinants of Adopted Demand and Supply 1951- 2000. *National Science Foundation*, doi: 10.1.1.700.

Buchler, A. (2018). Fostering and Adoption in Islamic Law – Under Consideration of Morocco, Egypt, and the United Arab Emirates. *Electronic Journal of Islamic and Middle Eastern Law, 6,* 31-55.*http://www.ejimel.uzh.ch/*

Chinyere, T, N. Socio Religious Impication of Child Adoption in lgboland South EasternNigeria. (2013).*AcademicJournal of Interdisciplinary Students,* 2(11), doi:10.5901/ajis.2013.v2n11p168

Efrat, A., Lebleng, D., Liao, S., Pandya, S, S., (2015). Babies across Boarders: The political Economy of International Child Adoption. *International students quarterly,* 59(3), 615-628, https://doi.org/10.1111/isqu.12206

தினகரன். *(2011).*பிள்ளைகளை மகவேற்பு செய்தல் தொடர்பான இலங்கையின் சட்ட நிலைமை. http://www.thinakaran.lk

Kutti, F. (2014). Islamic Law and Adoptions. Forthcoming in Robert L. Ballard et al., the Intercountry Adoption Debate: Dialogues across Disciplines. Newcastle upon Tyne, UK: Cambridge Scholars Publishing, Valparaiso Univsity Legal Studies Research Paper No. 14-5, Availableat SSRN: https://ssrn.com/abstract=2457066

Mansoor. M.A.M. (2020). *ThatheduththuValarththalai Islam Angeegarikkirathaa?* [Does Islam Allow Child Adoption] [Video file]. YouTube.https://www.youtube.com/watch?v=rEn7qWJiK9E

Mazahir, S.M.M. (2010). Kuḻanthaiyaiththattheduthal- Or IslāmiyaNōkku [Adoption of Child - An Islamic Perspective. *Kalam, IV*, 75-79http://ir.lib.seu.ac.lk/123456789/419.

Muslim Women's Shura Council. (2011). *Adoption and the Care of OrphanChildren: Islam and the Best Interests of the Child.* American Society for Muslim Advancement. Available at https://bettercarenetwork.org/

Oladokun, A., Arulojun, O., Oladokun R., Morhanson, I, O., Bamghoya, E, A., Adewole I, F., Ojengbede, O, A. (2009). Acceptability of Child Adoption as Management Option for Infertility in Nigeria: Evidence from focus group discussion, *African journal of reproduction health.*13 (1), 79-91, e1SSN: 111824841/55661/article/20%text – 93191-1-10-20100615

Onayemi, O, M. (2019). From humanitarianism to family building: Genres of security implications of child adoption as a management strategy for infertility. *International Journal of Sociology and Social Policy.* 1(1). https://www.emerald.com/insight/content/doi/10.1108/IJSSP-09-2018-0148/full/html

Rifath, B. AK., Rishadh, M. N., & Farij, M.J.M. (2019). Kuḻanthaiyaith thattheduthal OrIslāmiyaNōkku. Proceedings of 6th International Symposium of Faculty of Islamic Studies and Arabic Language on *Contemporary Trends of Islamic Sciences and Arabic Studies for the Nation Development*, 12th December 2019, South Eastern University University of Sri Lanka, Oluvil, Sri Lanka.http://ir.lib.seu.ac.lk/handle/123456789/4024

Rosenthal, J, A. (1995). Outcomes of Adoption of children with Special Needs. *The future of Children Journal,* https://doi.org/10.2307/1602403

Rotabi, K, S., & Bromfield, N, F. (2017). From Intercountry Adoption to Global SurrogacyA Human Rights History and New Fertility Frontiers. *Routledge*. https://www.routledge.com/From-Intercountry-Adoption-to-Global-Surrogacy-A-Human-Rights-History-and/Rotabi-Bromfield/p/book/9781138242630

United Nation. (2009). Child Adoption: Trend and Policies. United Nation Publication. https://www.un.org/en/development/desa/population/publications/pdf/policy/child-adoption.pdf

Wrobel, G. M., & Neil, E. (2009). International advances in adoption research for practice. *Wiley-Blackwell*. https://doi.org/10.1002/9780470741276

Yassari, N. (2015). Adding by Choice: Adoption and Functional Equivalents in Islamic and Middle Eastern Law. *The American Journal of Comparative Law*, 63(4), 927–962. https://academic.oup.com/ajcl/article-abstract/63/4/927/2572130

Zhang, W. (2006). Child Adoption in Contemporary Rural China. *Journal of Family Issues,* 27(3), https://doi.org/10.177/0192513x0583096